## 9. கர்த்தர் நல்லவர் அவர் கிருபை

**பல்லவி**

கர்த்தர் நல்லவர் - அவர்
கிருபைஎன்றுமுள்ளதே
கர்த்தர் நல்லவர் அவர்
இரக்கம் முடிவுஇல்லாததே

*ஆ... அல்லேலூயா ஓ... ஓசன்னா (2)*

**சரணங்கள்**

1. பலத்த கையினாலும் என்னை
ஓங்கிய புயத்தினாலும்
இதுவரை நடத்தினீர்
இனிமேலும் நடத்துவீர்
- கர்த்தர் நல்லவர்

2. சத்துரு கண்களுக்கு என்னை
மறைத்து கொண்டீரே
ஆபத்து வேளைகளில்
சூழ்ந்து கொண்டீர
- கர்த்தர் நல்லவர்

3. என் கால்கள் சருக்கும் போதெல்லாம்
வழுவாமல் காத்தீரே
பாதம் கல்லில் இடறாமல்
தாங்கி நிறுத்தினீரே
- கர்த்தர் நல்லவர்